போகிறது என்று தெரியாத நிலையில் உள்ள ஆயக்கட்டை விரிவு படுத்துவது, விவசாயத்திற்கும் நல்லதல்ல, அரசாங்கத்திற்கும் நல்லதல்ல, எனவே அதுபற்றி பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, பவானி ஆற்றுக்கும் காளிங்கராயன் கால்வாய்க்கும், இப்போது நடைபெற்றுவரும் காவிரி நீர் பேச்சுக்கும் சம்பந்தமில்லை. அந்தப் பகுதிகளிலே லிஃப்ட் இர்ரிகேஷன் நடைபெறுகிறது. அதே மாதிரி முசிறி பகுதியிலும் காவிரி ஆற்றையொட்டி உள்ள பகுதிகளிலே அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் வைத்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பவானியும் காவிரியின் கிளை ஆறுதான் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர திக்ஷிதர்: பவானி உபநதி. கிளைநதி யில்லை. காவிரியோடு வந்து சேருகின்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அது எப்படியானாலும் ஒன்று உறுதி. கீழ் பகுதியிலுள்ள ஆயக்கட்டுகள் பாதிக்கப்படாத வகையிலே மேல் பகுதியிலுள்ள ஆயக்கட்டு பகுதிகளுக்கு ஏற்கெனவே சில ஆண்டுகளாக அந்த முறையில் தண்ணீர் பயன்படுத்தப்பட்டு வந்தால், அதை ஒழுங்குபடுத்தலாமா என்று அரசு ஆலோசித்து வருகிறது. அவற்றை ஒழுங்குபடுத்த வேண்டுமா அல்லது அப்புறப்படுத்த வேண்டுமா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவிக்கும் ஆலோசனைகளின் பேரிலேதான் அரசு முடிவெடுத்து நடவடிக்கை எடுக்கும்.

Water-Tank at Arcottonkudisai Village

* 186 *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to construct a Water-Tank at Arcottonkudisai Village in Moonjurpattu Panchayat, Vellore Taluk, North Arcot District;

(*b*) if so, when the work will be taken up; and

(*c*) the estimated expenditure for the work?

ஆற்காட்டான் குடிசை கிராமத்தில் நீர்த்தேக்கம்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் தாலுக்கா, மூஞ்சூர்பட்டு பஞ்சாயத்து, ஆற்காட்டான்குடிசை கிராமத்தில் நீர்த்தேக்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆமெனில்; இப்பணி எப்போது துவக்கப்படும்?

(உ) இதன் மதிப்பீடு யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) நீர்த் தேக்கம் கட்டும் திட்டம் இல்லை, குட்டை அமைக்கும் திட்டம் உள்ளது.

(இ) & (உ) இதன் மதிப்பீடு ரூ. 24,000.

(பிற்பகல் 4–20)

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இதை பொதுப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு சில பகுதிகளிலும் இது போன்ற நீர் குட்டைகள் அமைக்க வேண்டும் என்று எல்லா மாவட்டங்களிலும் திட்டமிடப்பட்டு, அதைக் குறித்து அரசு பரிசீலித்ததே, அதனுடைய முடிவு என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, குட்டையாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்து ரூ. 24 ஆயிரம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

திரு. கே. ராஜாராம்: உங்கள் பாலிஸி என்ன என்றுதான் அவர்கள் கேட்கின்றார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர்களே, எல்லா மாவட்டங்களிலும் குட்டைகள் அமைக்கின்ற திட்டம் நடைமுறையில் இருந்து வருகின்றது. முழு விவரம் என்னிடத்திலே இல்லை. எல்லா மாவட்டங்களிலும் இது போன்ற திட்டம் அமைத்துக் கொண்டு வரப்படுகின்றது.

Housing Scheme at Krishnagiri

*187 *Q.*—THIRU K. ARIVAZHAGAN: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) whether there is any proposal to construct houses at Krishnagiri under 10 per cent Scheme of the Tamil Nadu Housing Board;

(*b*) if so, whether any amount has been collected from the public; and

(*c*) how long it will take to execute the Scheme?

கிருட்டிணகிரியில் வீடு கட்டும் திட்டம்

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 10 விழுக்காடு திட்டத்தின் கீழ் கிருட்டிணகிரியில் வீடு கட்டும் திட்டம் ஏதும் உள்ளதா?